பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

# காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(19.06.2024 முதல் 23.06.2024 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 049 (06) PJN/GKMS/2024 தேதி: 18.06.2024

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (13.06.2024 முதல் 17.06.2024 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -23.06.2024 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13/06 | 14/06 | 15/06 | 16/06 | 17/06 | | நாள்-1 19/06 | நாள்-2 20/06 | நாள்-3 21/06 | நாள்-4 22/06 | நாள்-5 23/06 |
| 0 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 2 | 4 | 5 | 3 | 3 |
| 37 | 37 | 37 | 39 | 39 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 37 | 37 | 36 | 36 | 36 |
| 27 | 27 | 28 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 27 | 27 | 26 | 26 | 25 |
| 4 | 3 | 5 | 4 | 3 | மேக மூட்டம் | 8 | 7 | 6 | 7 | 8 |
| 60-85 | 61-85 | 50-86 | 53-79 | 50-85 | ஈரப்பதம் (%) | 50-70 | 40-70 | 40-60 | 50-60 | 50-60 |
| 5 | 4 | 5 | 5 | 3 | காற்றின் வேகம் (கி.மீ) | 24 | 20 | 22 | 20 | 20 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (19.06.2024 முதல் 23.06.2024 வரை):**

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. வெப்ப நிலை 25-37 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 40-70 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 20-24 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தெற்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

ஜூன் 23 லிருந்து 29 வரை மழை (2.1 மி.மீ) இயல்பிற்கு குறைவாகவும், அதிகபட்ச வெப்பநிலை (34.2 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (24.6 டி.செ) இயல்பாக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுரை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| பருத்தி | காய்க்கும் பருவம் | வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்த எக்கடருக்கு பேசில்லஸ் சப்டில்லிஸ் 2.5 கிலோ மற்றும் டிரைக்கோடெர்மா விரிடி 2.5 கிலோ அகியவற்றை 250 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து சீராக வயலில் தூவ வேண்டும். |
| | | ஊட்டச்சத்து குறைப்பாட்டை குறைக்க காட்டன் பிளஸ் என்ற நுண்ணுட்ட கலவையை எக்டருக்கு 6.25 கிலோ என்ற அளவில் இரண்டு முறை தெளிக்க வேண்டும். |
| | | பருத்தியில் இரகங்களுக்கு 15 வது கனுவிலும், ஒட்டு செடிகளுக்கு 20 வது கனுவிலும் நுனி கிள்ளுவதன் மூலம் மகசூலை அதிகரிக்கலாம் |
| கத்தரி | காய்க்கும் பருவம் | கத்தரி பயிரில் காய் பூச்சிகளை கட்டுப்படுத்த லிட்டருக்கு எமாமெக்டின் பென்சோயேட் 4% SG 0.4 கிராம் என்ற அளவில் தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| பாகல் மற்றும் புடலை | காய்க்கும் பருவம் | பாகல் மற்றும் புடலையில் பெண்பூக்களின் எண்ணிக்கைகளை அதிகரிக்க எத்ரல் கரைசலை 100 பிபிஎம் (ஒரு மில்லி 10 லிட்டர் தண்ணீரில்), பீர்க்கனில் 250 பிபிஎம் (2.5 மில்லி 10 லிட்டர் தண்ணீரில்), விதைத்த 15 வது நாளிலிருந்து வாராந்திர இடைவெளியில் நான்கு முறை தெளிக்கவும் |
| தென்னை | காய்க்கும் பருவம் | தென்னை மரத்தில் வேர் மூலம் தென்னை டானிக் (200 மில்லி/ மரத்திற்கு) 3 மாத இடைவெளியில் கொடுத்து குரும்பை உதிர்வதை தடுக்கலாம். |

**குறுஞ்செய்தி:** அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, பயிர்களுக்கு நீர் பாசனம் செய்வதை தவிர்க்கவும்.

**முதல்வர்**